**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 04.02.2026**
**OS. No. 124/2018**
**வழக்கு சாட்சி PW.1–பழனிசாமி , த/பெ.வையாபுரி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) என் தந்தை வையாபுரியும், நானும்இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். என் தந்தைக்கு சுமார் 80 வயது இருக்கும். என் தந்தைக்கும் சேர்த்துதான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். பிரதிவாதிகள் எங்கள் நிலத்தை விலைக்கு கேட்டார்கள், நாங்கள் தர மறுத்தால் பிரச்சனை செய்தார்கள், அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கில் 2018 ல் சாட்சியம் அளித்தபோது என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டவை என்றால் நான் சொல்லிதான் தாயர் செய்யப்பட்டது.

2) தாவா சொத்தின் சர்வே எண்.16, 26 மற்றும் 23 ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் 1.71 ஏக்கர் ஆகும். அதில் போர்வெல், கிணறு மற்றும் நான்கு வீடுகள் உள்ளன. மேற்கண்ட போர்வெல் கிணறு ஆகியவற்றை தாவா சொத்து விவரத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை ஆரம்பத்தில் நாங்கள் விவசாயம் செய்து வந்தோம். அதன் பிறகு அரசு எங்கள் பெயரில் பட்டா அளித்தால் அதன் விஸ்தீரணம் மட்டும் உள்ளது. தற்போது வரை சக்குபந்தி விவரம் ஏற்படுத்தவில்லை. மூன்று சர்வே எண்களில் கண்ட சொத்தும் தனித்தனியே உள்ளது.

3) ச.எண்.16 ல் கண்ட சொத்திற்கு கிழபுறம் பாரஸ்ட் நிலம் உள்ளது, மேற்குபுறம் அரசு புறம்போக்கு நிலம், வடபுறம் குப்பன் நிலம் உள்ளது, தெற்குபுறம் வீரன் நிலம் உள்ளது. ச.எண்.23 ல் கண்ட சொத்திற்கு கிழபுறம் காளிமுத்து நிலம் உள்ளது, மற்ற மூன்று திசைகளிலும் குப்பன் நிலம் உள்ளது. ச.எண்.26 ல் கண்ட சொத்திற்கு கிழபுறம் பாரஸ்ட் நிலம் உள்ளது, மேற்குபுறம் குப்பன் நிலம், வடபுறம் காளிமுத்து உள்ளது,

தெற்குபுறம் வீரன் நிலம் உள்ளது. பிரதிவாதிகளின் சொத்தின் சர்வே எண்கள்.15 மற்றும் 18 ஆகும். ச.எண்.18 ஆனது எங்களது சொத்தான ச.எண்.26 ஐ ஒட்டி அமைந்துள்ளது. என் தந்தை விவசாயம் செய்கிறார். நான் மோளம் அடிக்கும் தொழில் செய்து வருகிறேன்.

4) தாவா சொத்துக்கள் சம்மந்தமாக அரசு D கார்டு பட்டா எங்களுக்கு வழங்கியுள்ளதா என்றால் ஆமாம். D கார்டு பட்டாவில் எவ்வளவு விஸ்தீரணம், என்ன சர்வே எண் குறிப்பிட்டுள்ளது என்றால் நான் படிக்கவில்லை அதனால் தெரியவில்லை. என் தந்தை படித்துள்ளரா என்றால் இல்லை. என் தந்தை கைரேகை தான் செய்வார். நான் கையொப்பம் செய்வேன். பட்டா பாஸ்புக் மற்றும் UDR பட்டா ஆகியவற்றில் என்ன சர்வே எண், எவ்வளவு விஸ்தீரணம் குறிப்பிட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் நான் படிக்காததால் எனக்கு தெரியவில்லை. என்னுடன் பிறந்தவர்கள் 3 நபர்கள். அவர்கள் பெயர்கள் சின்னகண்ணு, ராஜி, மணி ஆகும்.

5) நான் கோனூர் கிராமம் தோட்டக்காடு காட்டுவளவில் குடியுள்ளேன். நான் குடியுள்ள இடத்திற்கும், தாவா சொத்திற்கும் சுமார் 200 மீட்டர் தொலைவு இருக்கும். என் தந்தை என்னுடன் தான் வசித்து வருகிறார். தற்போது கண்ணில் ஆப்ரேஷன் செய்ததால் ஈரோட்டில் என் தங்கை வீட்டில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார். தாவா சொத்தில் நாங்கள் தான் சுவாதீனத்தில் உள்ளோம் என்பதை நிரூபிக்க ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்தில் நாங்கள் சுவாதீனத்தில் இருப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6) தாவா சொத்தில் போர்வெல் அமைத்ததற்கான ரசீதோ, அதற்கு மின் இணைப்பு பெற்றதற்கான ஆவணங்களோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 10, 20 வருடங்களாகவே பிரதிவாதிகள் சொத்தை விற்கும் படி கேட்டுவந்தார்கள், அதன்பிறகு 2008 ல் எங்களிடம் பிரச்சனை செய்து வழக்கு ஒன்று தாக்கல் செய்தார்கள், அந்த வழக்கு முடிந்து மீண்டும் எங்களிடம் பிரச்சனை செய்ததால்

இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்தோம். மேற்படி விவரங்களை இந்த வழக்கில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம்.

7) பிரதிவாதிகள் எங்கள் சொத்தில் அத்துமீறி நுழைந்ததாக நான் வழக்குரையில் சொல்லியுள்ளது எந்த வருடம் என்றால் சுமார் 10 வருடங்களுக்கு முன் இருக்கும். பிரச்சனை செய்ததற்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தோமா என்றால் எங்கள் பிள்ளைகள் பாதிப்படைவார்கள் என்று புகார் அளிக்கவில்லை, பிரதிவாதிகள் பஞ்சாயத்து வைத்து நிலம் கேட்டார்கள், நாங்கள் கொடுக்க மறுத்துவிட்டோம். பிரதிவாதிகளின் தந்தை பெயர் வீரன் என்றால் சரிதான். வீரன் எப்போது இறந்தார் என்றால் சுமார் 7, 8 வருடங்கள் இருக்கும்.

8) என் தந்தை 1ம் வாதியும், பிரதிவாதிகளின் தந்தை வீரனும் அண்ணன் தம்பிகள் ஆவார்கள். மேற்படி உறவுமுறை குறித்து எங்கள் வழக்கில் சொல்லவில்லை என்றால் எனக்கு நினைவில்லை. பிரதிவாதிகளின் தந்தையான வீரன் என்பவர் அ.வ.எண்.235/2012 என்ற வழக்கை இதே நீதிமன்றத்தில் என் தந்தை மீதும், என் மீதும் மற்றும் சின்னதம்பி, ராஜா, கிட்டுசாமி, ராஜீ ஆகியோர்கள் மீது தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் பிரச்சனை செய்ததாக சொல்லி அந்த வழக்கை பிரதிவாதிகள் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். நிலத்தை கொடுக்கமாட்டோம் என சொன்னதால் தாக்கல் செய்தார்கள்.

9) வீரன் இறந்துவிட்டதால் மேற்கண்ட வழக்கு 19.06.2018ல் தள்ளுபடி செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். முதலில் ஒரு பட்டா வழங்கிவிட்டு, அதன்பிறகு அரசால் வேறு ஒரு பட்டா வழங்கப்பட்டது என்றால் எனக்கு நினைவில்லை. எங்கள் சொத்தை நாங்கள் சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் முறையாக அளந்து பார்த்தோமா என்றால் 2007, 2008லேயே அளந்துவிட்டோம். தாவா சொத்தில் நாங்கள் சுவாதீனத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சுவாதீனத்தில் தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல.

10) பிரதிவாதிகள் சுவாதீனத்தில் உள்ளதால் தான் நாங்கள் சுவாதீனத்தில் இருப்பதற்கான எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளோம்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 24.02.2026 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.